(இ) எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 11.10)

3. தகவல் கோரல்.

பத்திரிகை நிருபர்கள் கறுப்புச்சின்னம் அணிந்திருப்பது

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சியானாலும் அதைச் சபைக்குத் தெரிவிப்பதுதான் நாம் வழக்கமாக கடைபிடித்து வருகிற முறை. இன்றையதினம் 'பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ்' கறுப்புச் சின்னம் அணிந்து வந்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் தங்களுடைய அனுமதியின் கீழ் வருகிறார்கள். தமிழ்நாடு அரசாங்கம் பத்திரிகை சுதந்திரத்தை அடக்குவதற்கு சட்டம் கொண்டு வந்து, அதை நிறைவேற்றுவது கண்டிக்கிற வகையில் இருக்கிறது என்று பத்திரிகையிலே படித்திருக்கிறோம். அது உண்மைதானா? அவர்களுக்கு என்ன குறை இருக்கிறது என்பதைக் கேட்டு அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. ஏதாவது குறைகள் இருக்கிறதா என்பதைக் கேட்டு அரசாங்கத் தரப்பிலே ஸ்டேட்மென்ட் வைத்தாலும் வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகை நிருபர்கள் சபையில் பத்திரிகைக் குறிப்புகளை எடுக்கிறவர்களே தவிர அவர்கள் சபையின் அங்கமாக இல்லை. அவர்களுக்கு இருக்கிற குறை பற்றி உறுப்பினர்கள்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பத்திரிகையின் நிருபர்கள் அவையின் அங்கத்தினர் அல்ல; எலெக்டட் மெம்பர்ஸ் தான் இங்கே வரமுடியும். அவையினுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு முழுவதும் அனுப்புவதற்கு 'மெயின் இன்ஸ்ருமென்ட்' பிரஸ். அவர்களுக்கு 'கிரிவன்ஸ்' இருக்கிறது என்கிறபோது அவற்றை ரிசால்வ் செய்வது இந்த அவையினுடைய கடமை. உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்றாலும் எங்களுக்குத் தெரிய வந்ததை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.